புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ஆ.பழநியின் சாலிமைந்தனில் காப்பியக் கூறுகள்

ரா.ரம்யா, பதிவெண் :R20162512 / 2021
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
அழகப்பா அரசு கலைக் கல்லூரி,
காரைக்குடி – 630 003,

முனைவர். ப.சு.செல்வமீனா
ஆய்வு நெறியாளர்
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
அழகப்பா அரசு கலைக் கல்லூரி,
காரைக்குடி – 630 003,

ஆய்வுச் சுருக்கம்

காப்பியபுலவன் தான் கூற வந்த கருத்துக்களை நிரல்படத் தொகுத்து முறைப்படுத்தி வழங்கும் திறமே கதைக்கட்டமைப்பு ஆகும். ஆ.பழநியின் சாலிமைந்தன் காப்பியம் கங்கைக் காண்டம், குமரிக்காண்டம், கூடற்காண்டம், மணிபல்லவக் காண்டம் என நான்கு காண்டங்களையும், முப்பது படலங்களையும் கொண்டமைந்துள்ளது. காப்பிய இலக்கணம் கூறும் தண்டியலங்காரத்தின் வழி சாலிமைந்தன் காப்பியத்தின் கூறுகளை எடுத்துரைக்கும் நோக்கில் இவ்ஆய்வுச் சுருக்கம் அமைகின்றது.

கலைச் சொற்கள்

கமஞ்சூல் – பரசமயியர் - கடிய பசி – மெய்ப்பாடு – ஆலி – நொய்ம்மை

## முன்னுரை

சங்க காலம் முதல் தற்காலம் வரை பலவகையான படைப்புகள் தமிழ் மொழியில் படைக்கப் பெற்று வந்துள்ளன. அவ்வகையில் காப்பியமானது தமிழ் மொழியின் உயர்தர வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளது. உலக இலக்கியங்களுடன் ஒப்பிடத்தக்க அளவில் தமிழில் காப்பியங்கள் படைக்கப் பெற்றுள்ளன. தமிழில் காப்பிய வளர்ச்சி என்பது ஐம்பெருங்காப்பியங்கள் என்ற வகைமையில் தொடங்கி ஐஞ்சிறுகாப்பியங்களாகி அதன் பின் கம்பராமாயணம், வில்லிபாரதம், திருவிளையாடற்புராணம், சீறாப்புராணம், தேம்பாவணி என சமயத்திற்கு ஏற்றாற்போல் வளர்ந்து தற்போது பெருமையுடைய பண்பினைக் கொண்டோருக்கான காப்பியம் என்ற அளவில் இன்றும் வளர்ந்து வருகின்றது. இக்காப்பியங்கள் அதற்கான இலக்கண மரபுகளுக்குள் அமைவது சிறப்பாகும். ஆ.பழநி மணிமோகலைக் காப்பியத்தில் வரும் ஆபுத்திரனின் தாயை உயர்த்தி 'சாலிமைந்தன்' என்னும் காப்பியத்தை இயற்றியுள்ளார். அக்காப்பியத்தின் கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகம்.

## காப்பியக்கூறுகள்

தண்டியலங்காரம் என்னும் இலக்கண நூல் பெருங்காப்பியங்களின் அமைப்புக் குறித்து,

“பெருங்காப்பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகி
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
. . . . . . . . . . . . .

*கற்றோர் புனையும் பெற்றிய தென்ப"*[1]

*என்று கூறுகிறது. சாலிமைந்தன் காப்பியக்கூறுகள் அனைத்தும் கொண்ட தொடர்நிலைச் செய்யுளாகும். சாலிமைந்தன் காப்பியக் கூறுகள் அனைத்தும் கொட் தொடர்நிலைச் செய்யுளாகும்.*

*நூன்முகம்*

*நூன்முகம் என்பது வாழ்த்து, வணக்கம், வருபொருள் ஆகியவற்றை உரைத்தலாகும். சிலப்பதிகாரம் இயற்கையாகிய ஞாயிறு, திங்கள், மழை போன்றவற்றை வாழ்த்தாகக் கொண்டது போல் ஆ.பழநி தம் சாலிமைந்தன் காப்பியத்தில் கங்கையாற்றினை முதலாவதாகக் கொண்டு பாடியுள்ளார்.*

*கதிரவன் கடல் மகளைப் பிறர் காணாமல் கூடி முகிலாகி காற்றால் அலைந்து மழையாகி உலகிற்கு உதவுவது போல சாலி இளஞ்சாத்தனைக் கூடி ஆபுத்திரனைப் பெற்றெடுத்து மக்களுக்குத் தொண்டுச் செய்வதனை உள்ளுறையாகச் சுட்டுவதன் வழி காப்பியத் தொடக்கத்திலே ஆசிரியர் இயற்கையாகிய கதிரவனை,*

*"கதிரவன் புறத்தார் காண்குரு வண்ணம்*
*கடல்மகள் தனைப்புணர்ந்த ததனால்*
*முதர்வுறுங் கமங்சூல் மாமுகில் வானில்*
*. . . . . . . . . . . .*
*எதிர்கொள்ளும் நாட்டில் உறைபவர்க் கெல்லாம்*
*இன்னமு தூட்டுமாற் கங்கை" (சாலிமைந்தன் : கங்கை : பட-1, பா-1)*

*என்கிறார். நகரப் படலத்தில் வேதங்கள் ஓதக்கூடிய நகரில் ஓடிக்கொண்டிருக்கும் மாமுகில் இளைப்பாற விண்ணில் சென்று தங்கும் வாரணாசி நகரில் மலையளவு உயர்ந்த மனையிடங்களும், அவ்விடங்களைச் சுற்றிக் கோட்டை மதில்களும், மரங்களும் சூழ்ந்திருப்பதை,*

*"அரச வீதியும் அந்தணர் வீதியும்*
*விரசு பல்பொருள் வாணிகர் வீதியும்*
*பரச மயியர் வாழ்மனைப் பாங்கரும்*
*உரசு றாவணம் நீங்கியு றையுமால்" (சாலிமைந்தன் : கங்கை : பட-2, பா-6)*

*என்னும் அடிகள் சுட்டுகின்றன. இப்பாடலடிகளின் வழி வாழ்த்து, வணக்கம், வருபொருள் போன்றன இக்காப்பியத்தில் திகழ்வதை அறிய முடிகின்றது.*

*நுவல் பொருள்*

*பெருங்காப்பியக் கூறுகளில் தலையாய நுவல் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை எடுத்தியம்புவது காப்பிய மரபாகும். இவற்றில் குறையிருப்பின் சிறுகாப்பியத் தகுதியையே பெறும். இவற்றுள் அறம் என்பது இடத்திற்கு ஏற்பச், சூழலுக்கு ஏற்ப மாறும் தன்மையுடையது. அவற்றில் பசிப்பிணி என்பது மிகப்பெரிய கொடியநோயாகும். அந்த நோயைக் களைவதே மிகச் சிறந்த அறமாகும். இதனை மணிமேகலை,*

*"மக்கள் தேவர் என இரு சார்க்கும்*
*ஒத்த முடிவின் ஓர் அறம் உறைக்கேன்*
*பசிப்பிணி தீர்த்தல் என்றே, அவரும்*
*தவப்பெரு நல்அறம் சாற்றினர்"*[2]

*எனக்குறிப்பிடுகின்றது. இவ்வுலகில் கொடிய பசியால் வாடுவோருக்கு அன்பினால் உணவளித்து அவர்களின் மிகுதியான பசியைப் புன்னகையால் போக்குவதே தனது வாழ்நாள் கடமையாகக் கொண்டு அற வழியில் வாழ்வதனை,*

*"ஆதலினாற் கொடும்பசியா லல்லலுறு வார்க்குக்*
*காதலினால் உணவீந்து கடியபசி நோயைப்*
*போதலுறச் செய்துமுகப் புன்னகையைக் காணல்*
*சாதலினை எய்துவரை தலைமறமாக் கொள்வேன்"*

*(சாலிமைந்தன்: கூடற் : பட-1, பா-23)*

என்று சாலிமைந்தன் காப்பியத்தில் ஆபுத்திரனின் கூற்றுப்படி காப்பியப் பொருளானது புலப்படுகின்றது.

தன்னிகரில்லாத காப்பியத் தலைவன்

தமிழ்க் காப்பிய மரபில் முக்கியக் கூறாக அமைவது தன்னிகரில்லாத காப்பியத் தலைவன் படைக்கப்படவேண்டும் என்பதாகும். "காப்பிய இலக்கணங்களைக் கூறும் தண்டியலங்காரம், மாறனலங்காரம், நவநீதப்பாட்டியல் முதலிய இலக்கண நூல்கள் காப்பியம் தன்னிகரில்லாத தன்மையனாய் இருத்தல் வேண்டும்."[3] என்று தலைவனின் இயல்பைச்சுட்டுகிறது. சாலிமைந்தன் காப்பியத்தில் தன்னிகரில்லாத தலைவனாகவும், எல்லாவகை மாந்தர்களினாலும் போற்றக் கூடிய தலைவனாக ஆபுத்திரன் திகழ்வதையும், ஒவ்வொரு நொடியும் மற்றவர்களின் நலனுக்காகவே வாழவிரும்புவதையும்,

"காதலினால் பன்னாடும் சுற்றிப் பார்க்கும்
கருத்துடையே னல்லேன்யான், உயிர்க்குலத்தின்
தீதகலத் தொண்டுசெயும் நாளே வாழ்நாள்
செய்யாத நாளெல்லாம் செத்த நாளே
ஈ தெனது குறிக்கோளாம்" (சாலிமைந்தன் : கூடற் : பட-9, பா-21)

என்னும் பாடலடிகள் வழி கொண்டகுறிக்கோளில் மாறாதிருக்கும் ஆபுத்திரனனின் பண்பினை அறிய முடிகின்றது.

அகவாழ்வு

"நன்மணம் புணர்தல், புனல் விளையாட்டு, சிறுவர் பெறுதல் ஆகியவை 'அகவாழ்வு' எனும் காப்பிய உறுப்பில் அடங்குகின்றன."[4] காப்பியத்தின் மூன்றாவது படலமாகிய மணவினைப் படத்தில் அபஞ்சிகனுக்கும் சாலிக்கும் நிகழ்ந்த மணவிழாப் பற்றி பேசப்படுகின்றது. இதனை,

"மாவிலை தோர ணங்கள்
நாற்றினர் மனைமுன் தெங்கின்
காய்குலை தூக்கிக் கட்டிக்
கதிரொளிக் கோல மிட்டார்" (சாலிமைந்தன் : கங்கை : பட-3, பா-6)

என்னும் அடிகள் விளங்குகின்றன. மண விழாவிற்கு அலங்கரிக்கப்பட்ட நிகழ்வுகள் விரிவாகக்கூறப்பட்டுள்ளன. இதனைப் போல் புதல்வரைப் பெறுதல் எனும் காப்பியக் கூறுக்கேற்ப மகப்பேறுப் படலத்தில் அபஞ்சிகனால் ஒதுக்கப்பட்ட சாலி இளஞ்சாத்தனால் கருவுற்று புதல்வனைப் பெற்றெடுப்பதை,

"அரிய குணக் கோவலர்கள் வாழுஞ் சேரி
முற்றத்தை நெருங்குகையில் கருவுயிர்க்க
மூண்டவலி யாற்சாலி துடிக்கக் கண்டோர்
இற்றந்து துணைசெய்யக் கீழ்க டற்கண்
எழுசுடர்போ லொருமகனைப் பெற்றெடுத்தாள்"
(சாலிமைந்தன் : குமரி : பட-1, பா-8)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன.

புறவாழ்வு

"மந்திரம், தூது, இகல், செலவு,வென்றி ஆகியன காப்பியங்களில் அமைய வேண்டுமென்பது மரபு. இது புறவாழ்வு எனப்படும்."[5] நாடுசுற்றிவரல், அந்தணருக்கும் ஆபுத்திரனுக்கும் ஏற்படும் பூசல்கள் ஆகிய செயல்பாடுகளும் காப்பியப் போக்கிலே ஆங்காங்கே இடம்பெறுகின்றன. அந்தணர்கள் வேள்வித் தொழிலையே முதன்மையாகக் கொண்டு வேள்வித் தீயிலே நெய்யினையும், பட்டுத்துணிகளையும் வீணடிப்பதையும், பசுவினைப் பலிகொடுப்பதையும் விரும்பாத ஆபுத்திரன் அவர்களிடம் சண்டையிட்டு அவற்றைத் தடுக்கின்றான். இதனால் வேதியர்கள் அவனை ஊரைவிட்டு விரட்ட வேறுவழியின்றி ஆபுத்திரன் மதுரைக்குச் சென்று அங்கு, நெற்பயிருக்கு உயிர் தரும் மழை நீர் போல காலிழந்தவருக்கும் உடல் உறுப்புகள் அற்றவருக்கும், நோயுற்றவருக்கும் உணவளித்துப் பாதுகாப்பதை,

*"காலி ழுந்தவர் கையுறுப் பற்றவர்*
*கருது மைம்புல நற்றுணை தீர்ந்தவர்*
*நூலி ழுந்தறு முத்தென வாழ்க்கையில்*
*நொய்ம்மை யுற்றவர் கண்டனன்*
*. . . . . . . . . . ஆலி பெய்தெனத் தானிரந் தீட்டிய*
*அமுத மூட்டிடத் தன்னுளம் ஊன்றினன்"*

*(சாலிமைந்தன் : கூடற் : பட-3, பா-1)*

*என்பதன் வழி இக்காப்பியத்தின் புறவாழ்வு வெளிப்படுகின்றது.*

*மெய்ப்பாடு*

*காப்பியம் சிறப்படைய அதில் அமைந்துள்ள சுவை முக்கியமானதாகும். காப்பிய மாந்தர்கள் மெய்ப்பாடு வழியும், கதையில் அமைந்துள்ள சுவையின் வழி இஃது வெளிப்பட்டு நிற்கிறது.*

*"நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று*
*அப்பால் எட்டே மெய்ப்பாடு என்பர்"[6]*

*என்னும் நூற்பாவில் எண்வகை மெய்ப்பட்டைத் தொல்காப்பியம் வரையறுக்கின்றது. இந்த எண்வகைச் சுவைகள் இலக்கியங்களில் அமைந்து கற்போருக்கு இன்பம் தருகின்றது. ஒருவனுக்கு உடலும் உள்ளமும் பாதிக்கப்படும் பொழுது உடனடியாக கிடைக்கக்கூடிய மருந்து ஆறுதல் கூறக்கூடிய அன்னை. அத்தகைய அன்னையை இழந்த ஆபுத்திரன் அழுது புலம்புவதன் வழி அவலச் சுவையை,*

*"நாவூறும் இனியமொழி நாம்பேசிக் கூடாமல்*
*சாவூரில் கூடவெனச் சதிசெய்த தவ்விதிதான்*
*சாவூரில் கூடவெனச் சதிவிதிதான் செய்திலதேல்*
*நீவேறு நான்வேறாய் நிற்போமா கூடலிலே"*

*(சாலிமைந்தன் : மணிபல்லவ : பட-3, பா-1)*

*என்ற இப்பாடலடிகள் மூலம் ஆசிரியர் சுட்டுகின்றார்.*

*யாப்பு*

*நம் முன்னோர்கள் முத்தமிழின் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இலக்கணம் வகுத்துள்ளனர். அவற்றுள் யாப்பு குறிப்பிடத்தக்கது. யாப்பிலக்கணம் என்பது செய்யுள் எழுதுவதற்குரிய இலக்கணத்தைக் குறிக்கும். தமிழ்க் காப்பியங்களில் பல பா வகைகள் பயின்று அமைகின்றன. பா வகை மாறும் போது காப்பியம் கற்போருக்குச் சுவையூட்டும் வகையில் காப்பியத்தைப் படைத்துள்ளார் ஆசிரியர் ஆ.பழநி. நேரிசையாசிரியப்பா, அறுசீர் ஆசிரிய விருத்தம், எழுசீர் ஆசிரிய விருத்தம், எண்சீர் ஆசிரியவிருத்தம், கலித்துறை, கலிவிருத்தம், கலிநிலைத்துறை, கட்டளைக் கலிப்பா, கொச்சகச் கலிப்பா போன்ற பா வகைகள் இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன.*

*"நிலையாமை வருமென்னும் நினைவினளாய் நிகழின்பக்*
*கலையாவுங் கண்டறியுங் கருத்தினளாய்க் காஞ்சனன்றன்*
*மலைமேவுந் தோள்பிரிய மனமில்லாய் வாழ் நாளில்*
*கொலைமேவுங் கொடுங்காலன் காஞ்சனனைக் கொடுபோனான்"*

*(சாலிமைந்தன் : கங்கை : பட-7, பா-13)*

*என்ற பாடலடிகள் கொச்சகக் கலிப்பாவிற்குச் சான்றாகத் திகழ்கின்றன.*

*தொகுப்புரை*

*காப்பிய இலக்கணங்களாகச் சொல்லப்பட்டவற்றைப் பின்பற்றிய காப்பிய ஆசிரியர்கள் பலரும் சில இயல்புகளை ஒரே மாதிரியாக அமைத்தனர். அவை காப்பிய மரபுகள் ஆயின. மலை, கடல், நாடு, வளநகர், பருவம் என்னும் வருணனைகளைத் தனித்தனியே நாட்டுப் படலம், நகர்ப்படலம் எனப் பகுத்து விரிவாகப் பாடினர். இவை காப்பியக் கதைப்போக்கிற்குப் பெரிதும் துணை செய்யாத நிலையிலும் இம் மரபுகள் காப்பிய அமைப்பில் வேரூன்றி விட்டன.*

அவ்வகையில் “புலவர் ஆ.பழநியின் சாலிமைந்தனில் காப்பியக் கூறுகள்” என்னும் ஆய்வுக் கட்டுரையின் வழி,

- காப்பியமானது ஞாயிற்றை வாழ்த்துப் பாடலாகக் கொண்டுள்ளதையும்,
- ஆபுத்திரன் தொண்டு செய்வதையே கடமையாகக் கொண்டதன் வழி காப்பியத்தில் அறப்பொருள் திகழ்வதையும்,
- தன்னிகரில்லாத தலைவனாக ஆபுத்திரன் உயர்ந்த பண்புகளைக் கொண்டுள்ளதையும்,
- சாலி ஆபுத்திரனைப் பெற்றெடுத்ததன் வழி அகவாழ்வுக் கூறுகளையும்,
- அந்தணரை எதிர்த்த ஆபுத்திரனை ஊரைவிட்டு விரட்டியதன் வழி அவனது புறவாழ்வையும்,
- காப்பியச் சுவையை மிகுவிக்கும் அவலமெனும் மெய்ப்பாட்டினையும்,
- காப்பிய வடிவத்தினைக் குறிப்பிடும் வகையில் யாப்பு அமைப்பினையும் அறியமுடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. தண்டியலங்காரம், நூ.8.
2. தண்டபாணி துரை (உ.ஆ), மணிமேகலை, கா.12, 116-119
3. டாக்டர் தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப.263.
4. டாக்டர் பி.நசீர்தீன், கனகாபிஷேக மாலை (திறனாய்வு), ப.27.
5. மேலது., ப.28.
6. தொல். பொருள், நூ.1197.

துணைநூற்பட்டியல்


1. இராமலிங்கத் தம்பிரான்.கொ (உ.ஆ) - தண்டியலங்காரம், கழக வெளியீடு சென்னை – 108 பதிப்பு : 1938
2. இளம்பூரணர் (உ,ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம் முல்லைநிலையம் 9, பாரதி நகர், முதல்தெரு, தி.நகர், சென்னை – 600 017 பதிப்பு – 1997
3. ஞானமூர்த்தி, தா.ஏ - இலக்கியத்திறனாய்வியல், யாழ் வெளியீடு AP 1108. 3வது தெரு, தென்றல் குடியிருப்பு மேற்கு, அண்ணாநகர், சென்னை – 600 040
4. தண்டபாணிதுரை (உ.ஆ) - மணிமேகலை, உமா பதிப்பகம், 18 (பழைய எண்.171) பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை – 600 001. பதிப்பு : 2001
5. நசீர்தீன். பி - கனகாபிஷேக மாலை (திறனாய்வு) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டி வளாகம், தரமணி, சென்னை – 600 113


********* ********* ********** ********* ********* ********** ********** **********